விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 வைகாசி 16 றம்ழான் 20 இதழ் 108

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 30 5-1986

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA RECEIVED 30-5-1986

## யாழ்நகரில் நேற்றிரவு ஷெல் தாக்குதலில் 9 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கோட்டையிலிருந்து நேற்றிரவு 'ஷெல்' ஏவப்பட்டதைத் தொடர்ந்து 9 பேர் படுகாயமுற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு சுமார் 8-30 மணிக்கு இந்த ஷெல் கன்னாதிட்டியில் வீழ்ந்து வெடித்ததால் அப்பகுதியைச் சேர்ந்த ஏ. சந்திரராஜா, என். குழந்தைவேலு, கே. ரவிக்குமார் [வைத்தீஸ்வரா மாணவன், ப. தமிழ்ச்செல்வன் [வைத்தீஸ்வரா மாணவன்), பி. சிங்கன், எஸ் ராஜன், கே. ரவிச்சந்திரன், கே. குலஸ்ரீ, பி.

[6ம் பக்கம் பார்க்க]

## அராலிக் கடலில் 'ஹெலி' சூட்டு ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

அராலித்துறையில் படகோட்டிகளிடையே ஏற்பட்ட மோதலையடுத்து அங்கு நிலவிய களேபரவேளையில் ஹெலிகொப்டர் வட்டமிட்டுத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் பயணிகளில் ஒருவர் பலியானார். ஒருவர் காயமடைந்தார்.

பயணிகள் பெருமளவில்கால் நடையாகக் கடலைக் கடந்து கொண்டிருக்கையில் அவர்கள் மீது ஹெலிகொப்டர் சுட்டது.

22 வயதான நாகரத்தினம் லோகேஸ்வரன் நியு லட்சுமி ஜுவலர்ஸ் உரிமையாளரும், ஒருபிள்ளையின் தகப்பனும் எனத் தெரியவருகிறது.

## ● இனப்பிரச்னை:

# இலங்கை-இந்தியப்பேச்சுகள் 10 நாட்களில் மீண்டும் ஆரம்பம்

## டிக்ஸிற் நாளை புதுடில்லி பயணம்

(கொழும்பு)

**இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை இன்னும் பத்துத்தினங்களில் மீண்டும் ஆரம்பமாகலாமென்று இந்திய-இலங்கைத் தரப்பிலான உயர் அதிகாரிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள்.**

இதேவேளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் திரு. ஜே என். டிக்ஸிற் நாளை சனிக்கிழமை புதுடில்லிபயணமாகவுள்ளார்.

இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக இதுவரை ஆலோசிக்கப்பட்ட விஷயங்களில் எழுந்த சந்தேகங்கள் குறித்து இலங்கை அரசு அளித்த விளக்கங்களை திரு. ஜே என். டிக்ஸிற் இந்திய உயர்மட்டக்குழுவிடம் எடுத்துக்கூறுவார்.

காணி, காணிக்குடியேற்றம், சட்டம், ஒழுங்கு பாதுகாப்புக் குறித்து இந்திய தரப்பில் எழுப்பப்பட்ட ஐயப்பாடுகள் குறித்து இலங்கையின் பதில்கள் போதிய திருப்தியளிக்காமையால் இந்திய-இலங்கை பேச்சுக்களில் பெரும் விழுக்காடு ஏற்பட்டது.

இது இவ்வாறு இருக்க, இனப்பிரச்னைக்குத் தீர்வுகாண மத்தியஸ்தர் ஒருவர் முன்னிலையில் தமிழ்க்குழுக்களுடன் இலங்கை அரசு பேசத்தயார் என்று இந்திய அரசுக்குத்தெரிவிக்கப்பட்டுள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை மத்தியஸ்தர் முன்னிலையில் பேச்சுக்கள் இடம்பெறுமானல் பேச்சுக்களில் ஏற்படக்கூடிய சங்கட நிலையைப் போக்கக் கூடிய வாய்ப்புக்கள் இருக்குமென தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு அத்துலத்முதலி கருத்து வெளியிட்டிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது;

### "மத்தியஸ்தம் இந்தியாவே"

இலங்கை இனப்பிரச்னை விடயத்தில் இந்தியாவே பெரும் நெருக்கடிக்குள்ளாவதால் மத்தியஸ்தம் வகிக்கும் பொறுப்பை இந்தியாவே வகிக்கவேண்டுமென்று இந்திய உயர் அதிகாரி ஒருவர் கருத்து வெளியிட்டுள்ளார். [ய-பி]

## பொதுநலவாய மத்தியஸ்தம்: அனுமதிக்க முடியாது - சிதம்பரம்

[சென்னை]

'இலங்கை இனப் பிரச்னையில் பொதுநலவாய அமைப்பு மத்தியஸ்தம் செய்வதை இந்தியா அனுமதிக்கமாட்டாது'' என்று இந்திய இணை அமைச்சர் திரு பி சிதம்பரம் கூறியுள்ளார்.

திரு. சிதம்பரம் சென்னையில் நேற்றுப் பத்திரிகையாளர் மத்தியில் உரை நிகழ்த்தியபோதே மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

''இலங்கை பொதுநலவாய அமைப்பு நாடுகளின் உதவியை இனப்பிரச்னை தொடர்பாக நாடப் போவதாக அறிவித்துள்ளது. ஆனல் இந்தியா இந்த முயற்சியை ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது. அத்துடன் இத்தகையதொரு தீர்வு முயற்சி ஏற்றுக் கொள்ளப்படமுடியாது.

இலங்கை இனப்பிரச்னைக்கு இந்தியாவின் மத்தியஸ்தம் மூலமே தீர்வு முயற்சிகளை மேற்கொள்ளலாம். இதில் பொதுநலவாய அமைப்போ அல்லது வேறு வெளிநாட்டுச் சக்தியோ தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று சிதம்பரம் கூறினார். (கி)

## O-, B + இரத்தம் தேவை

[யாழ்ப்பாணம்]

யாழ் வைத்தியசாலையில் கையிருப்பிலிருந்த இருவகை இரத்தம் முற்றாகத் தீர்ந்து போனதால் நோயாளருக்கு அவசர சத்திர சிகிச்சைகளுக்கு இரத்தம் ஏற்றமுடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

இரத்தம் O(-) B(+) ஆகிய இரு வகையுமே உடன் தேவைப்படுகின்றன நல்மனத்துடன் இத்தேவையைமக்கள் பூர்த்தி செய்வார்கள் என்று வைத்திய வட்டாரம் எதிர்பார்க்கின்றது. (பி)

## கல்லூரி மாணவர் தயாளம்: இரத்தவங்கியில் ஓரளவு தட்டுப்பாடு நீங்கியுள்ளது

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரின் இரு கல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்களின் இரத்த நன்கொடையால் தற்போது யாழ். பெரியாஸ்பத்திரியின் இரத்த வங்கியில் இரத்தக் கையிருப்பு

(6-ம பக்கம் பார்க்க)

## அராலித்துறையில் வள்ள ஓட்டிகள் மோதல்: பிரயாணிகள் கஷ்டம் இன்று வழமைபோல் சேவை

(அராலி)

தீவுப்பகுதிக்கான வள்ளப் போக்குவரத்துச் சேவை தொடர்பாக அராலித் துறையில் இரு பகுதி வள்ள ஓட்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து வள்ளங்களில் பிரயாணம் செய்த பிரயாணிகள் பெரும் சிரமத்துக்குள்ளானர்கள்

அராலித்துறையில் இரு பகுதி வள்ள ஓட்டிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்துப் பிரயாணிகள் பலரும் நடந்தே கடலைக் கடந்தனர்.

இம் மோதல் சம்பவத்தை அடுத்து அராலி மக்கள் பொது ஸ்தாபன மூலமாக மோதல்களைக் கட்டுப் படுத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வளளங்களில் இலவசமாகப் பிரயாணிகளை ஏற்றி அனுப்பினர். இன்று தொடக்கம் நியாயமான கட்டணத்தில் வள்ளச் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பண்ணைப் பால மூலமாக தீவுப் பகுதிப் போக்குவரத்துச் சீர் குலைவினுல் அராலித்துறை வள்ளப் போக்குவரத்துப் பிரபல்யமடைந்து வருவது குறிப்பிடத்தக்கது. (வா)

## கோட்டையிலிருந்து சூடு: புதிய தபாலகத்தில் பதற்றம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக்காலை கோட்டையிலிருந்து துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்சப்பட்டதைத் தொடர்ந்து யாழ் 2ம் குறுக்குத்தெரு தற்காலிக தபாலகத்தில் பதற்றம் நிலவியது.

இத் துப்பாக்கிச்சூட்டின் போது தபாலக அயலில் ஒரு இளைஞர் பலியானர். இதனையடுத்து இப்பகுதி எங்கும் பதற்றம் நிலவியது

தபால் கந்தோரில் நேற்றுக் கடிதங்கள் தரம் பிரிக்கும் வேலை மட்டும் நடைபெற்றது. சுமார் 300 தபால் பைகளில் கடந்த 10 நாட்களாகத தேங்கிக்கிடந்த கடிதங்கள் ஊழியர்களினுல் தரம் பிரிக்கப்பட்டன.

கோட்டைக்குச் சமீபத்திலுள்ள யாழ். தபால் கந்தோரிலிருந்து தளபாடங்களை எடுத்துச்செல்ல அனுமதி மறுக்கப்பட்டதால், ஊழியர்கள் பழைய தபாலகத்தின்

(6ம் பக்கம் பார்க்க)

## நேற்று யாழ். நகரில் துப்பாக்கிச் சூட்டுக்கு கடல் தொழிலாளர் பலி

[யாழ்ப்பாணம்]

புதிதாக நேற்றுத் திறக்கப்பட்ட பழைய யாழ். தபால் கந்தோருக்குச் சமீபத்தில் நேற்றுக்காலை கோட்டைப் பக்கத்திலிருந்து வந்த துப்பாக்கி சூட்டுக்கு இளைஞர் ஒருவர் பலியானர்.

பலியான இளைஞர் மலைநாட்டைச்சேர்ந்தவர் பெயர் வி. ராஜா 22 வயதான இவர் ஒரு கடல் தொழிலாளியாவார். கடையில் தேநீர் அருந்துவதற்குச் செல்கையில் இவர் சுடப்பட்டார். [க]

## மட்டக்களப்பில் மூவர் பலி

[மட்டக்களப்பு]

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மூவரை நோக்கி, ரோந்து சென்ற அதிரடிப்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அந்த மூவரும் ஸ்தலத்திலேயே பலியானர்கள்.

பலியான மூன்று சடலங்களையும் கைப்பற்றிய அதிரடிப்படையினர், மோட்டார்

(6-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இரு கொள்ளைகள்

(கொழும்பு)

கோட்டையிலும் புறக்கோட்டையிலும் நேற்றுப்பிற்பகல் அடுத்தடுத்து இருவழிப்பறிக்கொள்ளைச் சம்பவங்கள் இடம் பெற்றன.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் கொள்ளுப்பிட்டியிலிருந்து கோட்டையிலுள்ள

(6ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

கொக்குவில் குளப்பிட்டிச் சந்திக்கு அருகாமையில், காங்கேசன்துறை வீதியில் புதிய வீடு சகல வசதிகளுடனும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. மகாலிங்கம், இராமலிங்கம் வீதி, முடமாவடி, நல்லூர். (C2539)

சாவகச்சேரி வடக்கில் கண்டி வீதி - அம்மன் வீதிகளை எல்லையாகக்கொண்ட எட்டுப் பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் தொடர்பு கொள் க: க. மார்க்கண்டு, ''ஆனந்த பதி'', கோப்பாய் தெற்கு, கோப்பாய். [C 2511]

பாவிக்கப்படாத புதிய கைக் கடிகாரங்கள், சுவர் மணிக் கூடுகள் (Rnytham, Seiko made), Molinex Grinder Set, National B/W T.V 17'' என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: ''ஸ்னேக்கா வீடியோ மன்சில்'', இல 1, நவீன சந்தை, திருநெல்வேலி சந்தி, திருநெல்வேலி. (C2537)

Remington cash Machine, Remington Calculator உடன் விற்பனைக்குண்டு. கணேசன், 63, K. K. S Road, யாழ்ப்பாணம். (C 2575)

''பொமனேரியன்'' ஆண், பெண் குட்டிகள் தடுப்பு ஊசி போடப்பட்டு பூச்சி மருந்து கொடுக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: த. சிதம்பரநாதன், முன்னாள் நல்லூர் M. P காரியாலயம், ஆடியபாத வீதி, திருநெல்வேலி வடக்கு. [C 2586]

நல்லநிலையில்உள்ள, 8½'' Colchester (1) Mascot Lathe [English make], (2) புதிய Air Compressure 9 C. F. M. [China make] உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: பிள்ளையார் ஸ்ரோர்ஸ், கைதடி சந்தி, கைதடி. [C 2579]

காரைநகர் சம்பந்தர்கண்டியில் 5½ பரப்புகாணியும் வீடும் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: அ சுந்தரம், ''மடம்'', சங்கானை. [C 2576]

A 50 Car கேம்பிறிட்ஜ் EN 7477 விற்பனைக்குண்டு. நல்ல நிலையிலுள்ளதும் ஒரு கைப்பாவனையிலுமுள்ளது. விபரங்களுக்கு: எஸ். ஏ. பரந்தாமன் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அண்மையில்கீரிமலை-யாழ்ப்பாண வீதி, கல்வளை வீதியில் 3ம் வீடு, சண்டிலிப்பாய் மத்தி. [C 2582]

கைதடிச் சந்தியில் 10½ பரப்பு காணியில் எல்லாவிதமான கைத்தொழில்களுக்கும் ஏற்ற முறையில் 130'x28' விஸ்தீரணம் உள்ள கட்டிடம் மின்சாரம், தண்ணீர், வசதியுடன் விற்பனைக்கு உண்டு: தொடர்பு கொள்ளவும். N. Tharma, 243, Nawalar Road, Jaffna. [C 2580]

திருநெல்வேலி பாற்பண்ணைக்கு ½ மைல் தூரத்தில் வீடுகட்டக்கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்குஉண்டு. விபரங்களுக்கு: ஹரி ஹரன் என்ரபிறைஸ், 337, பலாலி றோட். பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (C 2587)

## விற்பனைக்கு

40 நாள் வயதுடைய 4 அல்சேஷன் சுத்தஇனக் குட்டிகள் விற்பனைக்கு உண்டு. K. வைரமுத்து, இல. 46, கலட்டி அம்மன் கோவிலடி, யாழ்ப்பாணம் அல்லது 969, காங்கேசன்துறைவீதி, தட்டா தெரு, யாழ்ப்பாணம். (A 700)

பம்பாய் வெங்காயவிதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (C2589)

## தேவை

துர்க்கை அம்பாள் தேவஸ்தானம் சாவகச்சேரி. தேவஸ்தானத்திற்கு மண்டபவேலை, மடப்படிவேலைக்கும்,அர்சகராகவும் உதவிப்பூசகர் ஒருவர் தேவை. போதிய ஊதியம் கொடுக்கப்படும். உடன்நேரில் வரவும். விபரங்களுக்கு: ப. மகாகணபதிசர்மா, தர்மகர்த்தா, சாவகச்சேரி. [C 2578]

விஞ்ஞானரீதியான தையல் வேலை செய்ய பெண்கள் தேவை. தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் உடனடியாக தேவைப்படுகிறது. தொடர்பு கொள்க .மே பெயர் அக்கடமி,108, கன்னாதிட்டி, வீதி, யாழ்ப்பாணம். [C 2566]

## வகுப்புகள்

தமிழ் சுருக்கெழுத்து, தட்டெழுத்து தற்போது மற்றய பாடங்களான ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து, ஆங்கிலம், ஆங்கில கணக்கியல் ஆகிய பாடங்களுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்டளவு இட வசதி மட்டுமே உண்டு. இம்பீரியல் இன்ஸ்ரீயூட், இளவாலை. (C 2585)

புதிய Spoken English பிரிவு வருகிற June 3ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகிறது. புதிய ''TOEFL'' வகுப்புக்களும் இம்மாதம் 30 ம் திகதி பகல் 11 மணிக்கும் 31ம் திகதி காலை 9 மணிக்கும் ஆரம்பமாகிறது. தொடர்பு: S.B. Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். (C 2548)

ரேடியோand ரீ.வி (டெக்,) வெல்டிங், வீட்டு வயறிங், வாகனங்களுக்கான வயறிங், மோட்டார் மெக்கானிசம், நீர்க்குழாய்கள் பொருத்துதல், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதியவகுப்புகள் 31- 05- 86, 01-06-86 இல் ஆரம்பமாகின்றன. முதலிற் சேருபவருக்குக் கட்டணம் மிகக் குறைவு. சான்றிதழ் பெறுமதியானது VISPA ENGINEERING 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [C2536]

## சேவை

தட்டச்சுயந்திரங்கள் (Typewriters) சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். தொடர்பு:FudoEnterprises 39/17, மின்சார நிலைய வீதி, (3 ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம். [C 2565]

## வைத்தியம்

மூலரோகங்கள், வாதரோகங்கள், சருமரோகங்கள், எக்ஸிமா, தொய்வ, பீனிசம், தலைவலி, முடியுதிர்வு, அகால நரை, நரம்புத்தளர்ச்சி, நீரழிவு, மாதவிடாய்கால வேதனைகள், மகப்பேறின்மை, குழந்தைகட்குசித்தஆயுர்வேத சிகிச்சை பெறலாம். Dr. R மங்களாம்பிகை D, A. M. Dr. R. இலக்ஷ்மண ஐயர் D,A.M., மங்களபதி வைத்தியசாலை, [பண்டாரகுளம் பிள்ளையார் கோவிலடி] 41/5, சங்கிலியன்வீதி, நல்லூர். (C2570)

## தவறிவிட்டது

கந்தையா பொன்னம்பலம் 36, கே. கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிப்பவருடைய அடையாள அட்டை இல 432822133 கே. கே. எஸ். வீதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேல் குறிப்பிட்ட விலாசத்தில் ஒப்படைத்தால் தகுந்த சன்மானம் வழங்கப்படும். [C 2568]

### மானிப்பாய் கோவில் பற்று ப.நோ.கூ. சங்கம்

### வெற்றுசாக்கு விற்பனைக்கு

மேற்படி சங்கத்தில் உள்ள 3050 வெற்றுச் சாக்குகளின் விற்பனைக்கான கேள்விகள் 5-6-86 நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விபரங்களை சங்கத்தில் பெற்றுக்கொள்ளவும்.

பொதுமுகாமையாளர்.
A 698

### 10-வது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி ரூபராணி செல்வரத்தினம் (ரூபி)

அன்னையின் மடியில்: 18-10-1958
ஆண்டவன் நிழலில்: 30-5-76

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த நீங்கள் பத்து ஆண்டுகள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்கள் திரு உருவமும் நினைவும் எமது உள்ளத்தில் எப்பொழுதும் நீங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

தங்கள் பிரிவால் துயருறும்.
அன்புக்குடும்பத்தினர்.

''செல்வகிரி'' உடுப்பிட்டி. (C2562)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



அமரர் கந்தையா சிவஞானசுந்தரம்

''ஞானம்''

அன்னை மடியில்: 18-12-1950
இறைவன் அடியில்: 30-04-1986

தாயக மண்மீட்கப் புறப்பட்டு அம்மண்ணுக்கே உனது இன்னுயிர் நீத்த எம் செல்வமே! உன்நினைவுகள் என்றும் அழியா.

மாவீரன்''ஞானத்''துக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை சமர்ப்பித்து, உங்கள் ஆத்ம சாந்திக்காகஇறைவனை வேண்டிநிற்கும்:

அன்பு அம்மா,அப்பா,
சகோதரர்,
சகோதரிகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

பெரிய நாவலடி,
கொடிகாமம். (A696)

### இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி மகேஸ்வரி இராமநாதன்

தோற்றம்: 2-5-1937
மறைவு: 22-05-1984

எங்கள் ஒளிவிளக்காக விளங்கி அன்புடனும், பண்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் வழி நடாத்திய அன்புத் தெய்வமே, தங்கள் ஆத்ம சாந்திக்காகஇறைவனை இறைஞ்சுகின்றோம்.

கணவன், பிள்ளைகள்.

கே. வி. இராமநாதன்,
வி. ஆர். வி.
றேட் சென்ரர்,
சங்குவேலி சந்தி,
சுழிபுரம். C 2572

### முதலாவது நினைவஞ்சலி



அமரர் சுப்பையா தம்பிஐயா
(முன்னாள் C. W. E. பண்டசாலை அதிபர்)

தோற்றம்: 26-2-1918
மறைவு: 9-6-1985
திதி: 30-5-86

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, மக்கள்,
மருமகன்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள்,
'அன்ன விலா',
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். C 2530

### 31ம் நாள் நினைவஞ்சலி



அ. செபமாலைமுத்து
(ரவீந்திரன்)

ஆண்டவன் படைப்பு: 7-10-1959

அரக்கர் அழிப்பு: 30-4-1986

மண்ணிலே உந்தன் மா
உடலோ மாண்டதையா
விண்ணிலே நிதமும்
உந்தன் காட்சியோ
தெரியுதையா
எண்ணவே நெஞ்ச
மெல்லாம் ஏங்கித்
தவிக்குதையா
விண்ணிலேஎம்தனுக்காய்
வேண்டுவீர் நிதமுமையா
வாழத்துடித்தோ வெளி
நாடு விட்டு வந்தீர்
வாழ்க்கை தொடங்கு
முன்பே வஞ்சர் வெடி
பட்டதுவோ,
வாழ்க்கைத்துணையாள்
தனியளாய் தான்
துடிக்க
மீளாத்துயில் கொண்ட
எம்தெய்வமே மீளாயோ.

இவரின் பிரிவால்
என்றும்துயருறும்:

மனைவி, தந்தை,
சகோதரர்கள்,
மைத்துனர்மார்,
மச்சாள்மார், சகலன்,
மாமன், மாமி.
சில்லாலை வடக்கு.
C 2533

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

இன்றைய சமுதாயத்தில் பலர் தம்மோடு பிறர் ஒத்துவரவேண்டும் என்று விரும்புகின்றார்களே தவிர பிறரோடு தாம் ஒத்துப்போக வேண்டும் என்று கருதுவதில்லை.

—குன்றக்குடி அடிகள்.

# நமதுநோக்கு

## இதுவா அரச நீதி?

அநுராதபுரத்துக்கும் திருகோணமலைக்கும் இடையிலுள்ள மகாதிவுலுவெவ என்ற இடத்தில் சிங்களக் கிராமவாசிகள் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட 20 பேர் ஆயுதம் தரித்த இனந்தெரியாதவர்களால் அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் வேதனைக்குரியதுதான்.

இந்தக் குடும்பங்கள் அப்பகுதிக்கு எவ்வாறு வந்தார்கள், என்னநோக்கத்திற்காக அப்பகுதியில் குடியேற்றப்பட்டார்கள் என்பது பற்றியெல்லாம் பல்வேறு விதமான கருத்துக்கள் வெளிவந்துள்ளன. இக்கொலைகள் பற்றி பலவிதமான செய்திகளும், படவிளக்கங்களும் கொழும்புப் பத்திரிகைகளில் பெரிதாக விளம்பரப்படுத்தப்படுகின்றன.

தீவிரவாதிகளின் தாக்குதல்களுக்கு சிங்களக்கிராமவாசிகள் ஆளாகாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம் என்பதுபற்றி அதிகாரிகள் ஆலோசித்து வருகிறார்கள். மகாதிவுலுவெவ பகுதியில் இராணுவ முகாமொன்றை அமைக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கிராமவாசிகளுக்கு ஆயுதப்பயிற்சியளிப்பது பற்றியும், ஆயுதங்கள் வழங்குவதுபற்றியும் ஆலோசிக்கப்படுகின்றதாம்.

தாக்குதலுக்குள்ளாகியுள்ள கிராமவாசிகள் சிங்களவராய் இருந்தபோதிலும் அவர்களும் மனிதர்கள்தாம் என்பதால் அக்குடும்பங்களுக்கேற்பட்டுள்ள இழப்புகளுக்காக வேறெவரையும் போலவே நாமும் கவலையடைகின்றோம். இம்மாதிரிச் சம்பவங்கள் மீண்டும் ஏற்படக்கூடாதென்றும் விரும்புகின்றோம்.

ஆனால் அவர்கள் சிங்கள மக்களாய் இருப்பதை மாத்திரம் கருத்தில் கொண்டு அங்கலாய்க்கும் அரசும், அரசுத்தலைவர்களும், கொழும்புப் பத்திரிகைகளும் தமிழ்ப்பகுதிகளில் சாதாரண பொதுமக்கள்மீது நடத்தப்படும் தாக்குதல்கள் பற்றிமட்டும் ஏன் இந்த அக்கறை எடுத்துக்கொள்வதில்லை?

ஆயுதப்படைகள்மீது போராளிகள் தாக்குதல் நடத்துகிறார்கள்தான். அதையாரும் மறுப்பதற்கில்லை அவர்களை நேரில் எதிர்கொண்டு ஆயுதப்படைகள் மோதட்டும் வேண்டாம்என மறுப்பாரில்லை. ஆனால் அப்பாவி மக்களை ஏன் வதைக்கிறீர்கள்? நினைத்த போதெல்லாம் ஷெல் வீசி தமிழ்க் கிராமவாசிகளை ஏன் குலைக்கிறீர்கள்? ஆகாய விமானத் தாக்குதல்களால் எத்தனை பெண்கள்' குழந்தைகள், வயோதிபர்கள் பலியாகியுள்ளார்கள்?

எங்கே குண்டுவிழும், எப்போது விமானம்வரும் என்று வானத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டல்லவா இந்தமக்கள் வாழ்கிறார்கள்!

பலூன்வெடித்து சத்தம் கேட்டாலும் ராணுவம் வந்துவிட்டதாஎன குலைநடுக்கம் எடுக்கும் வாழ்க்கையல்லவா இங்கு நடைபெறுகின்றது. சிங்கள மக்களுக்கு ஆயுதம் வழங்க யோசிக்கும் அரசு அதேவிதமாக தமிழ்மக்களுக்கும் பாதுகாப்புத்தர யோசிக்காததேன்?

ஜனநாயகத்தை இலக்கண சுத்தமாகப் பின்பற்றுவதாகக் கூறிக்கொள்ளும் அரசாங்கம் சிங்கள மக்களுக்கொருநீதி தமிழ் மக்களுக்கொரு நீதியென நடந்து கொள்வது சரியன்று.

மக்கள் எவராய் இருந்தாலும் அவர்களுக்கு பாதுகாப்பு தேவை அதனை உறுதிப்படுத்துவதே அரசநீதி.

## போதைப் பொருள் அபாயம்!

போதைப்பொருள் தமிழ்ப்பகுதிகளுக்கும் வந்துவிட்ட விடயம் பெரும் கவலைக்குரியது. வந்து விட்டது மட்டுமல்ல ஏற்கனவே பல அதற்கு அடிமையாகி நோயாளிகளாகி விட்டதாகவும் தெரியவருகின்றது.

போதை வஸ்து பயன்படுத்தி நோயாளிகளான ஐந்து இளைஞர்கள் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஆஸ்பத்திரிக்கு வராமல் எத்தனை பேர் இருக்கிறார்கள்என்று தெரியவில்லை.

மனிதனின் மூளை நரம்புகளைப் பாதித்து நடைப்பிணமாக்கிவிடக் கூடிய இந்தப்பொருளை இங்கு கொண்டு வந்து சேர்த்த புண்ணியவான்யார் என்று தெரியவில்லை.

சமூகத்தின் சகல அம்சங்களையுமே பாதிக்கக் கூடிய இந்தப் போதைப்பொருள்களைப் பாவிப்பதிலிருந்து நமது எதிர்கால சந்ததியினரைப் பாதுகாப்பது சகலரதும் கடமை.

ஏற்கனவே குடிவகைகளின் அபரிமிதமான பாவனையால் பலவகையிலும் பாதிக்கப்பட்டுள்ள நமது சமூகம் பல நூற்றாண்டுகளாகப் பேணிப்பாதுகாத்து வரும் சமூகப்பண்பாடுகள் பலவற்றையும் இந்த இழிபொருள் பாவனையால் இழந்துவிடக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளது.

பெற்றோர், ஆசிரியர், சமயப்பெரியோர்கள் போன்ற அனைவரும் இதில் கவனம் செலுத்தி இது மேலும் பரவி வேரூன்றாதவாறு பார்த்துக்கொள்வது அவசியம்.

# புதிய கலைகள்; புதிய ஓவியம்; புதிய தலைமுறை

குவிந்துகிடக்கும்மண்டையோடுகள்; சில எலும்புத்துண்டுகள், ஒரு அவலப்பின்னணியில்தீயும், சாம்பலும் இருந்த, அழிந்த சுவடுகள் - 'உடம்பன் குளம் 19-02-86' என்று தலைப்பிடப்பட்ட இந்த ஓவியத்தைப் பற்றி வார்த்தைகளால் கோடிகாட்டமட்டுமே முடிகிறது.

இன்னொருஓவியம் - 'அகதிக் குடும்பம்' நிர்க்கதி; சூனியம் மறுபடியும் அவலம் இவையனைத்தும் வண்ணங்களாக வெளிப்படுகின்றன.

இன்றும் [30-05-86] நாளையும் சுண்டிக்குளி மகளிர்கல்லூரியில், யாழ்.பல்கலைக் கழகக் கலாச்சாரக் குழுவின் ஆதரவில் இடம்பெறுகிற, செல்விகள் நிர்மலா கோபாலசாமி, அருந்ததி சபாநாதன், சுகுணா தம்பித்துரை ஆகியோரின் ஓவிய 'அரங்கேற்ற'த்தில் இடம்பெறும் ஓவியங்கள் இரண்டைப் பற்றியே நான்மேலே குறிப்பிட்டேன்



நிர்மலா கோபாலசாமி

நமது வாழ்நிலை - அதனுடைய உக்கிரம் எல்லாக் கலை வடிவங்களையும் ஆழமாகவே பாதிக்கிறது. சில ஓவியத் தலைப்புக்களைப் பாருங்கள்: விடுதலைக்காக, பாதுகாப்பு வலயத்தை எதிர்த்து. தீக்குள் விரலைவைத்தால். யாழ் பெரிய சேமக்காலை 09-01-'5, விடிவிற்கு முந்திய மரணங்கள், ஆகாயத்தாக்குதல்.

இவ்வோவியங்களை வரைந்துள்ள மூன்று இளம் ஓவியர்களதும் வண்ணம்பற்றியபிரக்ஞையும், இவர்களுடைய சில நவீன ஓவியங்களில தூரிகை வீச்சுக்களும்பிரமிப்புத்தருவனவாக உள்ளன. இவர்கள் மூவரும் திரு. அ. மாற்கு, திரு.சி. சிவப்பிரகாசம் இருவரினதும் மாணவர்கள் என்பது குறிப்பிடப்பட வேண்டியது.

காவியங்கள், புராணங்களிலிருந்து பெற்ற கருக்களையும் எமது வாழ்வோடுதொடர்புற்றவற்றையும் வெளிப்படுத்துவதில் கூடிய அக்கறை காட்டும் நிர்மலா கோபாலசாமி

—சேரன்

யின் ஓவியங்களில் தெரிகிற லாகவம ரசிக்கத்தக்கது. இவர் தன்னையேவரைந்துள்ள (SELF PORTRAIT) ஓவியமொன்றும அரங்கேற்றத்தில் காணக்கிடக்கிறது.



அருந்ததி சபாநாதன்

யாழ்.பல்கலைக்கழக மாணவியான அருந்ததி சபாநாதன் ஓவியங்கள் ஒவ்வொன்றும் காலம்பற்றிய உணர்வை வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டுமென விரும்புபவர். தெருக்கூத்து, பகற்கனவு - I, II, III, பொன்மான் போன்ற இவரது ஓவியங்கள் நம் கவனத்தை வெகுவாகஈர்ப்பன.



சுகுணா தம்பித்துரை

சுகுணா தம்பித்துரையின்விடிவுக்கு முந்திய மரணங்கள் எனும் ஓவியம், கொக்கிளாய் ராணுவமுகாம் தாக்குதல் உயிரிழந்த போராளிகளை நினைவில் எழுப்புவதும் அதனூடாக ஏனைய மரணங்கள்பற்றிய சிந்தனை அலைகளை பின்னணிவண்ணங்களூடாக எழுப்புகிறது.

மூன்று ஓவியர்களுடையதும் நூற்றுமுப்பத்திஐந்து ஓவியங்களும் யாழ்ப்பாணத்தில்நவீன ஓவியம், ஓவியம்பற்றிய ஆர்வத்தையும் வளர்ச்சியையும் தூண்டி விடும்என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை.

ஓவியம், சிற்பம், மற்றும் நுண்கலைகளுக்கு நாம் செலுத்தும கவனம போதுமானதல்ல என்பதும் எம்மவரில் பலருக்கு இவைபற்றிய சிந்தனையே இல்லை என்பதும் மாற்றப்படவேண்டும்.

தேசிய விடுதலையோடொட்டி வெளிப்பாடடைகிற அனைத்துக் கலைவடிவங்களும் நமது வளமான ஒருதேசியக் கலாச்சாரத்தை நோக்கி எம்மை ஆற்றுப்படுத்த வேண்டும். இந்த வகையில், ஏற்கெனவே மண்சுமந்தமேனியர் [நாடகம்], எங்கள் மண்ணும் இந்தநாட்களும் [கவிதா நிகழ்வு]. மாயமான் [வீதி நாடகம்] போன்றவற்றினூடாக தமது பங்களிப்பை ஆற்றவந்த யாழ் பல்கலைக்கழக கலாச்சாரக் குழுவினர் ஓவிய அரங்கேற்றத்தை ஒழுங்கு செய்ததன் மூலம் தமது பணிகளை விசாலிக்கின்றனர்.

## மணிக்கூட்டு கோபுரத்துக்கு அடிக்கல்

[யாழ்ப்பாணம்]

''எங்குமாயுள்ள இறைவனை ஒவ்வொரு நிமிடமும் நினைக்க வேண்டும் சில சமயம் உலக மாயையில் ஈடுபடும் மனிதனை மணியோசை இறைவனிடம் ஈர்த்து விடுகிறது. நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஞானவைரவர் கோவில் கோபுரத்தைத் தொடர்ந்து மணிக்கூட்டுக் கோபுரமும் வளர இருப்பது தேற்றாமரத்தடி திருவருளே.

இவ்வாறு நவாலி வடக்கு தேற்றாமரத்தடி ஞானவைரவர் கோவிலில் அண்மையில் இடம்பெற்ற மணிக்கூட்டுக் கோபுர அத்திவாரக்கல் நாட்டுவிழாவில் பேசுகையில் மேற்படி ஆலய முகாமையாளர் திரு சி இராஜேஸ்வரன் கூறினர். பிரபல வர்த்தகர் திரு. ந ய. நடராசா மணிக்கூட்டுக்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார். இவ்வைபவத்தில் அராலியூரைச் சேர்ந்த திரு மு. மார்க்கண்டு [சுட்டிச் சிற்பி] மணிக்கூட்டுக்கோபுரத்துக்கான பூர்வாங்க வேலைகளை ஆரம்பித்து வைத்தார்'

## கிளிநொச்சி பிரஜைகள் குழு தலைவர் அறிக்கை

[யாழ்ப்பாணம்]

''அண்மைக் காலங்களில் எமது செயற் குழுவையும் அதன் அங்கத்தவர்களையும் பற்றிய சில பத்திரிகைச் செய்திகள் குறித்து உண்மை நிலைமைகளைத் தெளிவுபடுத்தவேண்டியுள்ளது. நாம் அவை குறித்து விளக்கமளிக்கக் கடமைப்பட்டுளளோம்'' என்று கிளிநொச்சி பிரஜைகள் குழுவின் தலைவர் டாக்டர் கி சுப்பையா விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

''பலவகையான இன்னல்களுக்குத் தமிழ்மக்கள் பலியாகிக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் கஷ்டமுறும் அம்மக்களின் நலன்களை ஓரளவுக்காவது கவனிக்கவேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்டதுதான் கிளிநொச்சி பிரஜைகள் குழு.

இந்த அடிப்படையில் எமது அமைப்பு கிளிநொச்சி இராணுவ முகாமை, மக்கள் நலன் கருதித் தற்போதைய இடத்திலிருந்து அகற்றவேண்டுமெனப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மூலம் சிபார்சு செய்யவைத்ததுடன் தொடர்ந்து அந்த முயற்சியில் ஈடுபட்டும்வருகின்றது. நெருக்கடியான நேரங்களிற்கூடஇராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட நூற்றுக்கணக்கானஇளைஞர்களை விடுவிக்கவும் வழி செய்தது.

''போக்குவரத்துப் பிரச்னைகளால் இடை நிறுத்தப்பட்ட பரீட்சைகளை மீண்டும் நடைபெற ஏற்பாடு செய்தமைஇம் மாவட்டத்துக்கு அகதிகளாக வந்த ஆயிரக் கணக்கானோரின் குழந்தைகளுக்கு தொடர்ந்து பால்மா பெற்று விநியோகம் செய்து வருவதுடன், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை பெற்றுத் தருவதிலும் முன்னின்று உழைத்து வருகின்றது

''மக்கள் நலனை முன்னிட்டு செயல்படும் ஒரு அமைப்பைப் பற்றி ஆதார பூர்வமான காரணங்கள் எதுவுமின்றி குறை கூறுவதுதவறே மக்கள் சக்தி நிச்சயம் இவர்களை இனங் காணும் என்பது உண்மை.''

## ''வெளிநாட்டுக் கம்பனிகள் அச்சுறுத்தல் பற்றி அஞ்சத்தேவையில்லை''

— நிதி அமைச்சர்

(கொழும்பு]

''இலங்கையில் இயங்கும் வெளிநாட்டுக் கம்பனிகள் தீவிரவாதிகளால் தாக்கப்படும் என்று விடுக்கப்பட்டுள்ள எச்சரிக்கையைப் பொருட்படுத்தத் தேவையில்லை'' என்று நிதி திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் தெரிவித்துள்ளார்

வெளிநாட்டுக் கம்பனிகள் தம்மால் தாக்கப்படும் என்று தமிழ்த் தீவிரவாத இயக்கமொன்று வெளியிட்டுள்ள எச்சரிக்கை தொடர்பாக நிதி அமைச்சர் வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு அளித்துள்ள தெம்பூட்டும தகவல் ஒன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## ஆபிரிக்க பொருளாதாரப்பிரச்னை

# “வெளிநாட்டு உதவிமட்டும் தீர்வாகமாட்டாது!”

– அமெரிக்க வெளிநாட்டமைச்சர்

நியுயோர்க், மே. 29

“ஆபிரிக்க பொருளாதாரப் பிரச்னைக்கு வெளிநாட்டு உதவிமட்டும் ஒரு தீர்வாக மாட்டாது” என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ஜோர்ஜ் ஷுல்ஸ் தெரிவித்துள்ளார். ஒரு சிரான புனரமைப்பு நடவடிக்கைகள் மூலமாகவே ஆபிரிக்க நாடுகளில் பொருளாதாரச் சீர்திருத்தத்தை ஏற்படுத்தமுடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

ஆபிரிக்க பொருளாதார னத்தில் விஷேட கூட்டத் சீர்குலைவு தொடர்பாகவும், தொடர் ஒன்று இடம்பெறு வறுமை நிலை தொடர்பாக கின்றது. இக்கூட்டத்தில் வும் ஐக்கியநாடுகள் ஸ்தாப உரையாற்றியபோதே திரு. ஷுல்ஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது: “வெளிநாட்டு உதவிகள் மட்டும் ஆபிரிக்க பொருளாதார நிலைமையை சீர்திருத்திவி மாட்டாது. ஆபிரிக்க நாடுகளில் பொருளாதார ரீதியாக உள்நாட்டு புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும். அத்துடன் பொருளாதாரத் திட்டங்களும் வர்த்தக நடவடிக்கைகளும் விரிவாக்கப்பட வேண்டும்.

தனியார்துறை வளர்ச்சிக்கு கூடுதல் ஊக்கமளிக்கப்பட வேண்டும். அத்துடன் காத்திரமான பங்குடமை முறைகளும் கொண்டுவரப்பட வேண்டும். வெளிநாடுகளுடனான கூட்டு ஒத்துழைப்புகள் விஸ்தரிக்கப்படவேண்டும்.

பழமை முறையிலான உற்பத்தி வர்த்தக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மாற்றியமைக்கப்பட வேண்டும்

தங்கிவாழும் தன்மையைவிட சுயமாக இயங்குவதன் மூலமே ஆபிரிக்கா அதன் பொருளாதாரச் சிக்கல்களிலிருந்து மீட்சியடையமுடியும்” என்றார்.

இக்கூட்டத்தொடரில் பேசிய பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் சேர் ஜெவ்ரி ஹௌவ்வும், திரு. ஷுல்ஸின் உரையை ஆதரித்து கருத்து வெளியிட்டார். [கி]

## முதலாவது பிறந்ததின வாழ்த்து



### செல்வன் மதனராஜா சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம், இல 106, ஜின்னுரோட்டைச்சேர்ந்த சுப்பிரமணியம் - சியாமளாதேவி தம்பதிகளின் செல்வப்புதல்வன் செல்வன்மதனராஜா தனது முதலாவது பிறந்த தினத்தை 30-5-1986 [இன்று] வெள்ளிக்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், தேவி அத்தை [பிரான்ஸ்], மாமா [பிரான்ஸ்], பெரிய மாமா (பிரான்ஸ்), அத்தை, மாமாமார், அத்தைமார், சித்திமார், பிறவுண் ரோட் அப்பம்மா, சித்தப்பாமார், அக்காமார், மச்சாள்மார், மச்சான்மார், இத்தை அம்மம்மா, ஆச்சி, மற்றும் உற்றார், உறவினர் யாவரும பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் சிறப்புடன் வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

[C 2574]

## இன்றைய பலன்

மாதம்: வைகாசி
திகதி: 16 (1986-5-30)
கிழமை: வெள்ளி
திதி: ஸப்தமி பி.ப. வரை
நஷத்திரம்: அவிட்டம்
காலை 8-44ன் மேல் சதயம்

மேடம்: நினைத்த காரியத்தில் தடைகள் தோன்றும். சிலரின் கண்டனங்களுக்கும் இலக்காவீர்கள். மனத்திடம் விரும்பத்தக்கது.

இடபம்: கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். ஆசிரியர்களுக்கு புகழ் குவியும். புதிய வாகனம் கொள்வனவு செய்யப்படலாம்.

மிதுனம்; புதிய துறையில் ஈடுபடுவீர்கள். வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு. புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம்.

கடகம்: இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும். இதயபாரம் வேதனைப்படுத்தும். அமைதி நன்று.

சிங்கம்: பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை ஏற்படுத்தும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பேச்சில் நிதானம் பெருமையைத் தரும்.

கன்னி: சிறுவிடயம்கூட சிரமமாகத் தோன்றும். உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும். வாய்ப்பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

துலாம்: உயர்ந்த எண்ணங்கள் உங்களை புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும். தெய்வ வழிபாட்டில் ஆர்வம் பிறக்கும்.

விருச்சிகம்: கடமையில் முதலிடம் கிடைக்கும். பதவியில் உயர்வுக்கு இடமுண்டு. வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும்.

தனுசு: உழைப்பினால் முன்னேற்றம் ஏற்படும். வியாபாரத்துறையில் விருத்தியுண்டு. தாய்வழிப் பொருள்வரவுக்கும் இடம்உண்டு.

மகரம்: குறுக்குவழித் தலையீடு கோபத்தைக் கிளறும். திடீர் நடவடிக்கை மேற்கொள்வதன்மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம்.

கும்பம்: சிந்தையிலே குழப்பநிலை தோன்றக்கூடும்.

[5-ம் பக்கம் பார்க்க]


## விசேட அறிவித்தல்

பாதுகாப்பும் அமைதியுமான சூழலுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய விலாசம்:

### வூட்ஸன்ஸ் தளபாட மாளிகை

631, கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

(தரமான தளபாடங்கள் சியெஸ்டா மெத்தைகள் வழங்குவோர்)

(A - 693)

## விசேட அறிவித்தல்

பாதுகாப்பும் அமைதியும் உள்ள சூழலுக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

புதிய விலாசம்:

### மு. தா. பொன்னம்பலம்

தரமான இலங்கை ஓடுகள் விற்பனையாளர்கள்

631, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

முக்கிய குறிப்பு: மனோகரா தியேட்டர் சந்தியில் இருந்து 100 யார் தூரம்.

(A-692)

## பிரயாண ஒழுங்குகள்

★ கனடா ★ ஜேர்மனி
★ பிரான்ஸ் ★ டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு எமது முகவர் குறைந்த செலவில் அழைத்துச் செல்வார்.

**5-6-86-ல் Denmark** செல்ல விரும்புவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

V.M. Balasingam,
Hotel Orchid Inn,
57I/6 Galle Road,
Wellawatte.

உடனடியாகப் பாஸ்போட்டுடன் தொடர்பு கொள்ளவும்

★ சவூதியில் கிளீனர் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

★ குவைத்தில் ஆண், பெண் இரு பாலாருக்கும் வருமான ஒழுங்கும்,

பாஸ்போட், BOND, ரிக்கற் முதலியனவும் துரிதகெதியில் செய்துதரப்படும்.

# GROUP ATLANTIC

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக] (A-710)

# பவர்ஸ் உரம்

அதிக விளைச்சலுக்கும்
கூடிய இலாபத்துக்கும்

ABC

ஏ. பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

?

உண்டு! இளைப்பாறி!! களைப்பாறி!!!
மகிழ
யாழ். நகரில் பாதுகாப்பு நிறைந்த
ஓர் இடம்
என்ன? அங்கலாய்க்கின்றீர்கள்
நாளை இந்தஇடம் உங்களுக்காக
காத்திருக்கின்றது.
தயவுசெய்து 24 மணி நேரம் பொறுத்திருங்கள்.
நனறி. (A801)

# தேவை

## பதிவுபெற்ற தாதிமார்
## (Registered Nurses)

பதிவுபெற்ற தாதிமார்களிடமிருந்து பொதுத் தாதிமார் சேவைக்கும் மருத்துவ மாதுமார் (Midwifery) சேவைக்கும் அல்லது இரு சேவைகளுக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளின் அனுபவத்திற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். விண்ணபபங்களை 30-06-1986ஆம் திகதிக்கு முன் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்:

பதில் வைத்தியஅதிகாரி,
கிறீன் மெமோறியல் ஆஸ்பத்திரி,
மானிப்பாய்.

(A-699)

# ஈட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்
வழக்கு இல ஈடு/4371

இளவாலை 1. யோ. அ. வி. இராசநாயகமும்
2. பெண் மேரி யூஜினுவும். —வழக்காளிகள்.
எதிர க
இளவாலை, தெல்லிப்பழை தென்மேற்கு,
அ. இம்மானுவல் பூபாலசிங்கம். எதிராளி.

ஈடு/4371 இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1986ம் ஆண்டு ஜுன் மாதம் 25ந் திகதி (25 6-1986) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் எனக்களித்த அதிகாரசதின்படி அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**

முதல் வட்டி ரூ. 21975/-க்கு மேலும் இதில் ரூ. 15,000/-க்கு 16- 9- 1981 தொடக்கம் 12- 1-1984 வரைக்கும் வருடமொன்றுக்கு 36% வீதவட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 12% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூ. 6156/- மற்றும் விற்பனவிற்க்குரிய சலார்களும்.

**ஆதனவிபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று, தெல்லிப்பழை வடமேற்கிறை ''பத்தாவத்தை'' நில. பர. [2] இரண்டும் வீடும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை கிழக்கு சவுந்தரநாயகம் பெண் செல்வநாயகிச்கும், பேரின்பநாயகம் பெண் புஸ்பநாயகிக்கும் உரிய ஆதனங்கள், வடக்கு ஒழுங்கை, மேற்கு மரியாம்பிள்ளை இராசநாயகத்துக்குரிய ஆதனம், தெற்கு செவஸ்தியாம்பிள்ளை யோசேப்புவுச்குரிய ஆகனம். இவ்வெல்லைப்படி இதடங்கலும் மேற்கெல்லைக் காணிச்குள்ளிருக்கும் கிணற்றிற்குரிய பங்கும் வழிவாய்க்காலும் உரித்தும். H 491/138.

553, சங்கேசன்துறைவீதி,
யாழ்ப்பாணம்.
27- 5- 1986.

வ. சி. மகாதேவன்,
நீதிமன்ற விற்பனவு
ஆணையாளர்.
ஏலவிற்பனவாளர்.

[C 2583)

## பொன்னாலைப் பகுதியில்
# மின், தண்ணீர் விநியோகம் பாதிப்பு

[சுழிபுரம்]

பொன்னாலைப்பகுதி தண்ணீர் விநியோகம், மின்சார பாவனைகள் முற்றாக இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளன. பொன்னாலைக் கிருஷ்ணன் கோவில், மற்றும் தனியார் இல்லங்கள் யாவும் இருளில்மூழ்கியுள்ளன.

இந்த நிலமை ஏற்பட்டதற்கு மின்சார சபையினர் பொன்னாலையில் வைத்து மின்சாரத்தை துண்டித்ததே காரணமாகும். இப்பகுதியில் களவாக மின்சாரம் பாவனை செய்பவர்கள் தொகை அதிகரித்தாலேயே இத் துண்டிப்பு நடைபெற்றுள்ளது. மின்சாரம் களவாக எடுப்பவர்கள் எவ்வித பாதுகாப்பும் இல்லாமல் கண்டபடி மின்சாரத்தை பாவித்து வருகின்றனர் வழக்சம்பரையிலுள்ள மின்மாற்றி நிலையத்தில் பொருத்தப்பட்ட பல கருவிகள் களவாக மின்சாரம் எடுப்பவர்களால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

சங். சலோமைத்தாயார்
அவர்களின்
## நினைவுதினம்

இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தின் பிரதம தலைவியாக [1935-1952] கடமையாற்றி அண்மையில் தமது சொந்தநாட்டில் இறைவனடி சேர்ந்த சங் சலோமைத் தாயாரின் ஆன்மசாந்திக்காக திருப்பலியும், தொடர்ந்து அன்னாருக்கு ஓர் அஞ்சலிக் கூட்டமும் இளவாலை திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் 31-5-86 சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும். பழைய மாணவிகளும் அன்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செயலாளர்,
பழைய மாணவிகள்
சங்கம்.
[C-2584]

## ஓராண்டு
## நினைவஞ்சலி

திருமதி
பொன்னையா
வள்ளியபமை

மலர்வு: 5-3-1923
உதிர்வு; 10-6-85
ஆண்டுத்திதி: 30-5-86

இழந்து விட்டோம்
எங்கள் முழுமதியை
எங்கள் அருமை
அம்மாவே
எம்மையெல்லாம்
ஆழாத் துயரில் ஆழ்த்தி
விட்டு
சென்றீர்களே இவ்
வுலகைவிட்டு
மறைந்தீர்களே
அம்மாவே மண்ணுலகை
விட்டு
நித்தியம் நினைவிளங்கும்
அகல் விளக்கே
இறைவன் பாதத்தில்
நீங்கள் ஒரு மலராய்
உங்களுடைய ஆத்மா
சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி
நிற்கும்,
அன்புச் சகோதரர்கள்
மகன், மக்கள்,
மருமக்கள்,
அருமை வட்டம்,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.
[C-2595]

# இன்றைய...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

மனைவியின் உடல்நிலை சிறிது கவலை தரலாம். தெய்வ நம்பிக்கை மேலோங்கும்.

மீனம்; களஸ்திர வழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம்பெறும். நீண்ட நாள் பகை நிவர்த்தியாகும். வெளியிடத்துச் செய்தியும் உண்டு.

திருமலை
வே. ரவீந்திரன்

## சேவைக்கால பயிற்சி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கல்விவலயப் பாடசாலைகளில் 7ம், 8ம், 9ம் ஆண்டு வகுப்புகளில் விஞ்ஞானம் கணிதம், சமூகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி வகுப்பு 31ந் திகதிசனிக்கிழமை காலை யாழ். வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவுள்ளது. கல்வி அதிகாரி திரு கு சோமசுந்தரம் இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார், (ஐ)

# இன்று
# கூடி ஆராய்வர்

[வல்வெட்டித்துறை]

கடந்த 19ம் திகதி முதல் நடைபெற்ற ராணுவ, கடற்படை, ஹெலிக்கொப்டர், பொம்பர் தாக்குதல்களால் சேதமுற்ற வல்வை சிவகுரு வித்தியாலயம் அன்றுமுதல் நடைபெறாது மூடிக் கிடக்கின்றது.

அதனை எந்த இடத்தில் மாற்றி இயங்கவைக்கலாம் என்பதுபற்றிய அபிப்பிராயங்களைப் பெறுவதற்கானபொதுக்கூட்டமொன்று இன்று வெள்ளி காலை 9 மணிக்கு அம்மன் கோவில் வீதியில் நடைபெறுகிறது.

வெலிங்டன
10-30, 2-30, 6-15
மோகன் - பூர்ணிமா -
சுஜாத்தா-ஜெய்சங்கர்
நடித்த
விதி
(கலர் - புதிய பிரதி)

லிடோ
தினசரி காலை 10-30, 2-30
மாலை 6-30
முத்துராமன். சுஜாதா
நடித்த
மயங்குகிறுள் ஒரு
மாது
[புதியபிரதி-கலர்]

லிபேட்டி சினிமாவில்
வெலிங்டன்சந்திக்கு அருகாமையில்
துப்பாக்கிவீரன்
James Coburn
கவர்ச்சி அழகி
Sophia Lorene
நீக்ரோ அழகன்
Jim Brown நடித்த
FIRE POWER
5 பதக்கங்கள் பெற்ற
மாபெரும் வெளியீடு
10- 00, 2-15, 4-15, 6-30
வயது வந்தவர்களுக்கு
மட்டும்

# பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க் ★ பிரான்ஸ்
★ நெதர்லாந்து

ஆகிய நாடுகளுக்கு எமது அனுபவம் வாய்ந்த முகவர் 1-ம், 5-ம் திகதிகளில் உங்களை அழைத்துச் செல்வார்.

மத்திய கிழக்கில் வேலைவாய்ப்பு உண்டு.
DIPLOMA தகுதி உடையவர்கள் உடன் நேரில் வரவும்.

ரஜீவன் ட்ரவல்ஸ்
42, மணிக்கூட்டு வீதி,
(B. M. C. முன்பாக)
யாழ்ப்பாணம்.
T. P. 23665
(A 713)

# கட்டிட மேற்பார்வையாளர்
# பதவி வெற்றிடம்

கிளிநொச்சி மாவட்டத்தில் றெட்பானா நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் குடியேற்றத் திட்டத்தில் கட்டிட நிர்மாணங்களை மேற்பார்வை செய்வதற்கு பின்வரும் தகைமை உடையோரிடமிருந்து வண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

★ வயது :- 45 வருடங்கள்.

★ அனுபவம் :- குறைந்தது 5 வருடங்களாவது கட்டிட நிர்மாணத் தொழிலிலும், மேற்பார்வை செய்தலிலும், அனுபவமுடையவராய் இருத்தல் வேண்டும்.

★ கல்வித் தகைமை:- கட்டிட நிர்மாணித்தல் [Building Construction] பயிற்சி நெறி பின்பற்றியவராய் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் கீழ்க்காணும் முகவரிக்கு ஜுன் மாதம் 10-ம் திகதிக்கு முன்னதாக அனுப்பப்படல் வேண்டும்.

திட்ட இணைப்பாளர்,
றெட்பானா காரியாலயம்,
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

C 2590

பிரயாண ஒழுங்குகள்
★ கனடா ★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ டென்மார்க்
ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்
மற்றும்
பாஸ்போட், பொன்ட் (BOND),
விசா, ரிக்கற்
ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.
அத்துடன்
டென்மார்க் செல்பவர்களுக்கு
இலவசமாக பொன்ட்
செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு கொள்ளவும்!
INTERSUN GROUP,
சின்னத்தம்பி அவெனியு,
(மகளிர் கல்லூரி அருகாமை),
மானிப்பாய்.
A706

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
வெள்ளிக்கிழமை 30-5-86

# வல்வை முகாமில் வெள்ளைத்தோல் உருவங்கள்?

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் கறுப்புத் தோல்களோடு சில வெள்ளைத் தோல் உருவங்களையும் காண முடிகிறது இதேபோன்று தொண்டைமனாறு இராணுவ முகாமிலும் சில வெள்ளைத் தோல் உருவங்கள் தென்படுவதாகவும் தெரியவருகிறது.

வெளிநாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்ட இராணுவ, கொமாண்டோ பயிற்சியாளர்கள் இம் முகாம்களில் தங்கி இராணுவத்தினர்க்குப் பயிற்சியளிப்பதாகவும், சில தினங்களின் முன்னர் தினசரி காலை தொடக்கம் மாலை 7 மணி வரை தொடர்ச்சியான துவக்கு வேட்டுச் சத்தங்கள் கேட்டதற்கும், இவ் வெள்ளை உருவங்களுக்கும் சம்பந்தம் இருக்கலாம் எனவும் பேசிக் கொள்ளப்படுகிறது.

# யாழ். காணிப் பதிவகம் இடம்மாறுகிறது

[சுண்டுகுளி]

யாழ். நீதி மன்றத்திற்கருகாமையில் தற்போது செயல்பட்டு வரும் காணிப் பதிவகம் தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட உள்ளது.

ஊழியர்களினதும் மக்களினதும் பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஓர் அதிகாரி தெரிவித்தார்.

இப் புதிய அலுவலகம் யாழ் பழைய செயலகத்திலேயே அமைக்கப்படவுள்ளது.

புதிய கட்டிடம் காணிப் பதிவேடுகள் வைப்பதற்கும் ஊழியர்கள் பணியாற்றுவதற்கும் வசதிக் குறைவாக இருந்தாலும் சிறிது காலத்திற்கு இங்கேயே செயல்படவுள்ளதாகக் கூறப்படுகிறது.

இவ் அலுவலகத்திற்குச் சொந்தமான காணிப் பதிவேடுகளின் ஒரு பகுதி பாதுகாப்புக்கருதி முன் கூட்டியே யாழ் செயலகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

# துணிகரக் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவமுகாமிலிருந்து சில நூறு யார் தூரத்திலுள்ள 'குளோபல்' என்ற தனியார் தொலைத்தொடர்பு நிறுவனத்தில் குளிரூட்டும் பெட்டிவைக்கப்பட்டிருந்த பாதையால் உள்ளே சென்ற கொள்ளையர் பணம் உட்படப் பலபொருள்களைக் கொள்ளையடித்துச்சென்றுள்ளனர்.

இத்துணிகரக் கொள்ளை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றுள்ளது.

இராணுவத்தினரினதும், இளைஞர்களினதும் கண்காணிப்பில் இரவு பகலாக உள்ள இப்பகுதியில் அமைந்துள்ள மேற்படி நிறுவனத்தின் குளிரூட்டும் பெட்டியை அகற்றிவிட்டு அப்பாதையால் நிறுவனத்துள் புகுந்தே கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குளிரூட்டும் பெட்டி. 10ஆயிரம் ரூபா பணம். ஐயாயிரம் ரூபா பெறுமதியான காமெராக்கள், இரண்டு சுவர் மணிக்கூடுகள், மேசைக்காற்றாடி, ''கல்குலேட்டர் ரைம் குளக்'' என்பனவற்றுடன் அகதிகளுக்குச் சேர்த்து வைக்கப்பட்டிருந்த அறுநூற்றுப்பத்து ரூபாவும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளனவாம். (ஐ)

# ஈழத் தமிழர் பிரச்னை: தமிழக அனைத்துக் கட்சிகள் நேற்றுக்கூடி ஆராய்ந்தன

[சென்னை]

இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றி ஆராய தமிழக முதல்வர் திரு. ராமச்சந்திரன் தலைமையில் சர்வகட்சிக் கூட்டம் நேற்றுக் காலை சென்னையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் தமிழக இந்திரா காங்கிரஸ் தலைவர் திரு. எம். பழனியாண்டி, தமிழக ஜனதா கட்சித் தலைவர் திரு. இரா. செழியன், கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு கல்யாணசுந்தரம், மார்க்ஸிஸக் கம்யூ. கட்சியைச் சேர்ந்த திரு. நல்லசிவம், காந்தி காமராஜ் கட்சியைச் சேர்ந்த திரு குமரி அனந்தன், முஸ்லிம் லீக்கைச் சேர்ந்த ஜபார், பார்வாட் பிளாக்கைச் சேர்ந்த திரு. ஆண்டித்தேவர், குடியரசுக் கட்சியைச் சேர்ந்த திரு தமிழரசன் மற்றும் உழவர் உழைப்பாளர் கழகம், அம்பேத்கார் மக்கள் இயக்கம், தமிழக அமைச்சர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். [செ]

# கைக்குண்டு வீச்சு

[திருகோணமலை]

மக்கள் வங்கியின் திருமலைக் கிளை அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் நள்ளிரவு கைக்குண்டு வீசப்பட்டது.

கைக்குண்டு வெடித்த சத்தத்தைக்கேட்ட ஆயுதப்படையினர் சரமாரியாகத் துப்பாக்கி வேட்டுகளைத் தீர்த்தனர்.

இச் சம்பவங்களால் எதுவித சேதங்களும் ஏற்படவில்லையாம். [மா]

## இரத்த வங்கியில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தட்டுப்பாடு ஓரளவுக்கு நீங்கியுள்ளது.

பெரியாஸ்பத்திரியின் இரத்த வங்கியின் நிலைமை குறித்து ஆஸ்பத்திரியின் வைத்திய அத்தியட்சகரும் யாழ். போதனா வைத்தியசாலை இயக்குநருமான டாக்டர் நச்சினார்க்கினியருடன் தொடர்பு கொண்ட பொழுது இத்தகவலை தெரிவித்தார்.

'ஒருவாரத்திற்கு முன்பு இரத்த வங்கியின் கையிருப்பாக எட்டுப் பைந்து இரத்தமே இருந்தது. இந்த நிலைமையை யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரிகளின் மாணவர்களின் இரத்த நன்கொடையினால் தற்போது ஓரளவு கையிருப்பு அதிகரித்துள்ளது. இக் கல்லூரி மாணவர்களின் முன்மாதிரியை ஏனையோரும் பின்பற்றினால் இன்றைய சூழலில் யாழ் பெரியாஸ்பத்திரியில் ஏற்படும் இரத்தக் கையிருப்பு தட்டுப்பாட்டினை நீக்கி விடமுடியும், என அவர் கூறினார்

'இரத்த வங்கியில் எப்பொழுதும் நூறு பைந்து இரத்தம் கையிருப்பில் இருக்க வேண்டும் தினசரி சாதாரணமான நிலைமையில்பத்துமுதல் பதினைந்துபைந்துவரையிலான இரத்தம் நோயாளிகளுக்கு வழங்கப்படுகின்றது. இன்று ஏற்பட்டுவரும் திடீர் அசாதாரணமான சம்பவங்களினால் அவசரமாக இரத்தம்தேவைப்படும் நிலைமைகளினால் தினசரி ஏற்படும் இரத்தத்தின் அளவு அதிகரிக்கப்பட வேண்டியதாக உள்ளது. தயாளசிந்தையுடன் வீண் அச்சங்களை விட்டு இரத்ததானம் செய்வதற்கு யாழ்' மாவட்ட மக்கள் முன்வருவதன் மூலமே இரத்த வங்கியின் கையிருப்பையும், வேண்டிய குரூப் இரத்தத்தையும் என்றும் எச்சூழலிலும் பயன்படுத்தக்கூடியதாகஇருக்கும்''. (அ)

# அதிரடிப்படை ஜீப் விபத்தில் மூவர் படுகாயம்

(வவனியா)

அதிரடிப் படையினரின் ஜீப் வண்டி ஒன்று விபத்துக்குள்ளானதில் பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட இரு அதிரடிப்படையினர் படுகாயமடைந்தனர். அச் சமயத்தில் படையினர் மேற் கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் மீன்பிடித் தொழிலாளி ஒருவர் ஸ்தலத்தில் பலியானார். வவனியா குடியிருப்பு என்னும் இடத்தில் நேற்றுக் காலை இச் சம்பவம் இடம் பெற்றது.

பிரயாணிகள் சகிதம் வவனியா பஸ் நிலையத்திற்கு வந்த வானொன்றைப் போராளிகள் கடத்திச் செல்ல முற்பட்டதாகவும் அவ்விஷயம் பிசுபிசுத்துப் போகவே தகவலறிந்த அதிரடிப் படையினர் 3 ஜீப் வண்டிகளில் குடியிருப்பு பூந்தோட்டம் வழியாகத் தீவிரவாதிகளைத் தேடிச் சென்றபோதே ஜீப் விபத்துக்குள்ளானதாகவும் தெரிய வந்தது.

இச் சம்பவத்தின் போது பொலிஸ் அதிகாரியான தஸநாயக்கா, மற்றும் தமரத்ன, தர்மசேன ஆகியோருமே படு காயமடைந்த நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலைக் எடுத்துச் செல்லப்பட்டவர்களாவர்.

மீன்பிடித் தொழிலாளியான குடியிருப்பு பூந்தோட்ட வாசி எஸ் கனகசுந்தரம் (26 வயது) என்பவரது உடலம் வவனியா வைத்தியசாலைப் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (பி)

## வீட்டில் திருட்டு

(தெல்லிப்பழை)

வீட்டுக்காரர் இல்லாத சமயம் பார்த்து நள்ளிரவு நேரம் சுமார் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான மினசார உபகரணங்களும், வெளிநாட்டு உடுபுடைவைகளும் திருடப்பட்டுள்ளன.

வறுத்தலைவிளான் வி. எஸ். கனகரத்தினம் என்பவர் வீட்டில் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (மா)

# அடுத்தவாரம் நடைபெறும் அடகு நகைகள் மீளளிப்பு

[யாழ்ப்பாணம்]

மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக் கிளையிலும், வல்வெட்டித்துறைக் கிளையிலும் அடகு வைக்கப்பட்ட நகைகளை மீளப் பெறுவதற்குப் பணம் செலுத்தியவர்களுக்கு எதிர் வரும் ஜூன் மாதம் 6ம் 7ம், 8ம் திகதிகளில பலாலி இராணுவ முகாமுக்கு அண்மையில் வைத்து நகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச தலைமை அலுவலகத்தின் முகாமையாளர் அறிவித்துள்ளார்.

மேற்குறிப்பிட்ட மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு மீள்வதற்குப் பணம் செலுத்தியவர்கள் உடனடியாகக் குறித்த வங்கிக் கிளைகளின் முகாமையாளர்களைச் சந்தித்து அடகு நகைகளைப் பெறுவதற்குரிய ஒழுங்குகளைச் செய்துகொள்ளும்படியும் பிரதேச முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

மக்கள் வங்கியாழ் ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், காங்கேசன் துறைக் கிளையிலும் அடைவு எடுக்கத் தவறியவர்களுக்கும் இத்தினங்களில் நகைகள் வழங்குவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்றுதெரிவித்த முகாமையாளர், யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையிலும், காங்கேசன்துறைக் கிளையிலும் பணம் செலுத்தியவர்கள் உடனடியாகக் குறித்த முகாமையாளருடன் தொடர்புகொள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். [மா]

## கோட்டையிலிருந்து

(1ம பக்கத் தொடர்ச்சி)

கீழ்ப்பகுதியில், சிமெந்துத் தரையில் வைத்துக் கடிதங்களைத் தரம்பிரித்தார்கள்.

ஏராளமான வெளிநாட்டுக் கடிதங்களும் அங்கு காணப்பட்டன.

யாழ். நகரில் இ மாதம் 17 ம் தேதிக்குப்பின்னர் நேற்றுக் காலை தபால் ஊழியர்களினால் கடிதங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

தபால் பிரிக்கும் வேலை மட்டுமே பழைய தபால் கந்தோரில் நடைபெறும் என்றும், மற்றும் வேலைகளை யாழ். நகரிலுள்ள மற்றும் தபால் கந்தோர்களில் நடத்த ஏற்பாடு செய்யுமாறு தபால் அத்தியட்சகரிடம் கோரியிருப்பதாக ஊழியர்கள் தெரிவித்தனர். [க]

## சட்டவிரோத
# மின் இணைப்பை துண்டித்த ஊழியர்கள் தாக்கப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

சட்ட விரோத மின் பாவனைக்காகப் பொருத்தப்பட்டிருந்த 'வயரை' அகற்றியமைக்காக யாழ் மின்சாரசபை ஊழியர்கள் மூவர் தாக்கப்பட்டனர் தலையில் ஒருவருக்கு காயம் ஏற்பட்டது.

இதனால் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு நேற்றுக் காலையிலிருந்து மின் இணைப்புத் துண்டிக்கப் பட்டிருந்தது.

புதன்கிழமை மாலை யாழ். நகரத்திலுள்ள ஒரு நிறுவனத்தில் ஏற்பட்ட மின் தடையை நிவர்த்தி செய்யும் பொருட்டுக் கன்னாதிட்டி உப மின்நிலையத்திலிருந்து ஊழியர்கள் சென்றதாகவும், திருத்தம் செய்ய வேண்டியிருந்த மின் கம்பமருகே சட்ட விரோத மின் இணைப்பைக் கண்டதும் அதனை அவர்கள் அகற்றியதாகவும் இதனைத் தொடர்ந்து இவர்கள் தாக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

இத்தாக்குதலை எதிர்த்து நியாயம் வேண்டிய ஊழியர்கள் கே. கே. எஸ். வீதி, ஸ்ரான்லி வீதியின் ஒரு பகுதி என்பனவற்றுக்கான மின்சாரம் வழங்கும் உப நிலையத்தை இயங்காதபடி நிறுத்தி உள்ளார்கள்.

ஊழியர்களைத் தாக்கிய நபரை இளைஞர் சிலர் விசாரணைக்காகக் கூட்டிச் சென்றுள்ளனர் என்றும் தெரியவருகிறது. (ஐ)

## விழிப்புலனற்றோர் பொதுக்கூட்டம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நாளை 31ம் திகதி சனிக்கிழமை கைதடி நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தின் 10 வது ஆண்டு நிறைவையொட்டி நடைபெறவிருந்த பொதுக்கூட்டம் பின்போடப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது.

## கொழும்பில்...

[1ம பக்கத் தொடர்ச்சி]

வெளிநாட்டு வங்கி ஒன்றில் ஒருலட்சத்து 20 ஆயிரம் ரூபாவை வைப்பிலிட ஜீப் வண்டியில் ஒருவர் சென்ற சமயம் ஜீப்வண்டியைத் தொடர்ந்து மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர், ஜீப் வண்டியை முன்மறித்துப் பணத்தைக் கொள்ளை அடித்துக்கொண்டு தலைமறைவாகி விட்டனர்.

நேற்றுப் பிற்பகல் புறக் கோட்டையிலுள்ள வங்கி ஒன்றில் 59 ஆயிரம் ரூபாவை வைப்பிலிடச் சென்ற மற்றொருவரிடமிருந்து அப்பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது. இவ்வழிப்பறிச் கொள்ளையிலும் இரு நபர்களே சம்பந்தப்பட்டிருந்தார்களாம்.

இக் கொள்ளைச் சம்பவங்கள் சம்பந்தமாகப் பொலிசார் தீவிர விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். [ய- மா]

## மட்டக்களப்பில்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சைக்கிளை அவ்விடத்திலேயே வைத்துத் தீ மூட்டினர்

பட்டிருப்புத் தொகுதியிலுள்ள எருவிலுக்கும் களுவாஞ்சிக்குடிக்குமிடையில் உள்ள வீதியில் இச்சம்பவம் இடம் பெற்றது.

## யாழ் நகரில்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லோகேஸ்வரன் ஆகியோரே படுகாயத்திற்குள்ளானவர்கள். இவர்களில் 7பேர்நகைத் தொழில் செய்பவர்களாவர்.

சில நகைக் கடைகளும் சேதத்திற்குள்ளாகின.

## இழுபறி

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை மக்கள் வங்கிக்கிளை இடமாற்ற இழுபறியால் வங்கி இயங்காமல் இருக்கின்றது.

# ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

க. பொ. த. உயர்தர விஞ்ஞான வகுப்பு பௌதிகவியல் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்சி நாளை சனிக்கிழமையும், நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் யாழ். தொழில் நுட்பக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இப்பயிற்சியில் தொழில் நுட்ப பௌதிகவியல்துறை பற்றிய செய்முறைப் பயிற்சிகளும் விரிவுரைகளும் இடம்பெறும். இப்பயிற்சியை வடமாநிலக் கல்வியதிபதி திரு இரா. சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைப்பார், வட்டார விஞ்ஞானக் கல்வியதிகாரி திரு. [illegible] இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org